உள்ளதை வைத்து, நல்ல முறையில் மின்சாரம் விநியோகிக்கப் பட்டு வருகிறது. தமிழகத்தில் 25 சதவீதம் மின்சார வெட்டு இருந்தது. இப்போது அது 40 சதவீதமாக உயர்த்தப் பட்டிருக்கிறது. இருந்தாலும் சிறந்த முறையில் விநியோகம் செய்ய அதிகாரிகள் ஆலோசித்து வருகிறுர்கள்.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether speedy steps will be taken to see that agricultural pumpsets are not devoid of power?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, அதைப் பற்றித்தான் சொன்னேன். விவசாயிகளுக்கு கிட்டத்தட்ட ஆறு மணி நேரம் மின்சாரம் கொடுப்பதற்கு உறுதியளிக்கப்பட்டிருக் கிறது. ஆனுல் கடந்த மூன்று நாட்களாக அதில் சில சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும் இப்போது ஆந்திர மாநிலத்தில் ஸ்டிரைக் நடைபெறுவதால், நிலக்கரி நமக்கு போதிய அளவு கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

* 18 வினு—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிறுவனங்களுக்கும், வீடுகளுக்கும் மின்சார இணைப்பைப் பெற எலக்ட்ரிகல் (E.B.) லைசென்ஸ் பெற்றவர்கள் தான் செய்ய வேண்டுமென்றும், அப்படி மீறி செய்பவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள் என்றும் விதிகள் ஏதேனும் உள்ளனவா ?

(இ) ஆம் எனில், அப்படி அதற்காக தண்டிக்கப்பட்டவர்கள் சென்ற 1970–71-ம் ஆண்டில் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) சேலம் மாவட்டத்தில் நான்கு பேர்களின் மேல் வழக்குத் தொடுக்கப்பட்டு தண்டிக்கப்பட்டனர்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இப்படி சில நிறுவனங்களில் மின்சார இணைப்புக் கொடுப்பதற்கு, லைசென்ஸ் பெற்றவர்கள் லைசென்ஸ் பெருதவர்களுக்கு கையெழுத்துப்

1973 பிப்ரவரி 5]

போட்டுக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. அது முறையல்ல. ஆகவே, அப்படிப்பட்டவர்களின்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: லைசென்ஸ் பெற்றவர்கள் தான் இந்தப் பணியில் ஈடுபடலாம். மற்றவர்கள் தண்டிக்கப் படுவார்கள் என்று விதிகள் இருக்கின்றன. அதன்படி தண்டிக்கப் படுவார்கள்.

பெரியபாளையம் துணை மின் நிலையம்

* 19 வின—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் பெரியபாளையம் துணை மின் நிலையத்தினை 110 K.V. மின் நிலையமாக மாற்றியமைக்கும் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: 110 கே. வி. துணை மின் நிலையம் பெரியபாளையத்திலிருந்து 13 கி.மி. தூரத்தில் உள்ள பஞ்சட்டியில் அமைக்கப்பட இருக்கிறது. இம்மின்நிலைய வேலை 1973—74 எடுத்து முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

Theft of idols.

* 20 *Q.*—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Religous Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that idols are being stolen by foreign agents and persons outside the State;

(*b*) if so, the steps taken to prevent the theft; and

(*c*) the value of idols stolen in 1971 and the value of the idols recovered?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) கோயில் சிலைகள் சில சமயங்களில் களவாடப்படுகின்றன. ஆனால் எப்பொழுதும் அயல்நாட்டினராலும், வெளிமாநிலத்தினராலும் களவாடப் படுவதில்லை.

(இ) இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரும், காவல்துறை அலுவலர்களும் கோவில் சிலைகள் களவாடலைத்